செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறைகள்
பிறப்பிப்பவர் – திரு.ஆ.ர.ராகுல்நாத், இ.ஆ.ப.,

ந.க.எண். 3760 / 2022 பேரூ 1 நாள். .07.2023

பொருள்: பணியமைப்பு – பேரூராட்சிகள் நிர்வாகம் – காஞ்சிபுரம் மண்டலம் – செங்கல்பட்டு மாவட்டம் – பேரூராட்சிகளில் அரசாணை எண்.125 நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை நாள்.27.05.1999 ன்படி மற்றும் அரசாணை எண்.76 நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை நாள்.31.05.2019 ன்படியும் நுழைவு பணியிடங்களில் பணியாளர்கள் நியமனம் செய்யப்பட்டது – 02.06.2001 முதல் முன் தேதியிட்டு கருத்தியலாக இளநிலை உதவியாளர் / வரித்தண்டலராக பணி நியமனம் செய்யப்பட்டது – செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள பேரூராட்சிகளில் வரித்தண்டலராக பணிபுரிந்து வரும் – பணியாளர்களின் பணியினை – பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

பார்வை:
1. அரசாணை (நிலை) எண். 125, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (பேரூ1) துறை நாள்.27.05.1999.
2. அரசாணை (நிலை) எண். 76, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (பேரூ1) துறை நாள்.31.05.2019.
3. பேரூராட்சிகள் இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.984/2013/அ3, நாள்.28.11.2019.
4. பேரூராட்சிகள் இயக்குநர் சென்னை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.984/2013/அ3, நாள்.23.08.2021.
5. அரசு கூடுதல் தலைமை செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (பேரூ1) துறை, அவர்களின் கடிதம் எண்.360/பேரூ1/2023–4, நாள்.08.03.2023. மற்றும் 17.04.2023.
6. பேரூராட்சிகள் இயக்குநர் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.14709/2021 அ 2 நாள். 29.08.2022 மற்றும் 05.05.2023.
7. செயல் அலுவலர், மாமல்லபுரம் பேரூராட்சி கடிதம் ந.க.எண்.122/2023 அ1 நாள்.10.06.2023.
8. செயல் அலுவலர், அச்சரபாக்கம் பேரூராட்சி கடிதம் ந.க.எண்.1/2023 நாள்.30.06.2023.
9. செயல் அலுவலர், கருங்குழி பேரூராட்சி கடிதம் ந.க.எண்.288/2022 நாள்.23.06.2023.
10. தொடர்புடைய ஆவணங்கள்.

----

ஆணை : -

பேரூராட்சிகளில் பார்வை 1ல் காணும் அரசாணை (நிலை) எண்.125 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.ப3) துறை நாள்.27.05.1999ன்படி, பேரூராட்சிகளில் அரசு நிலையாக்கப்படாத பணியிடங்களில் பணியமர்த்தப்பட்ட பணியாளர்களை கல்வித் தகுதியின் அடிப்படையில் சிறப்பின நிகழ்வாக ஒருமுறை மட்டும் (One Time Consideration) பணியாளர்களை நியமனம் செய்யப்பட்ட நாளின் அடிப்படையில் கருத்தியலாக இளநிலை உதவியாளர்/ வரித்தண்டலராக நியமனம் செய்திட பார்வை 2ல் காணும் அரசாணை (நிலை)

//உண்மை நகல்//

எண்.76, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (பேரூ1) துறை, நாள்.31.05.2019 ன்படி ஆணையிடப்பட்டது.

இவ்வரசாணையில் குறிப்பிடப்பட்ட பின்வரும் பணியாளர்களுக்கு வரித்தண்டலராக பணியிடம் வழங்கி பார்வை 3ல்காணும் செயல்முறைகளில் ஆணையிடப்பட்டது. பின்னர் பார்வை 2ல் அரசாணையினை முழுமையாக நடைமுறைப்படுத்திட அப்பணியாளர்களை கீழ்நிலைப்பணியில் நியமனம் செய்யப்பட்ட நாளான 02.06.2001 முதல் கருத்தியலாக (Notionally) நியமனம் செய்து ஈர்த்து கொள்ள பார்வை 4 ல் காணும் செயல்முறைகளில் ஆணையிடப்பட்டது.

மேற்படி உத்தரவுகள் மற்றும் அரசாணையின்படி, காஞ்சிபுரம் மாவட்டத்தில் பின்வரும் பணியாளர்கள் கீழ்காணும் விவரப்படி பணிபுரிந்து வருகிறார்கள்.

| வ. எண் | பெயர் | பதவி உயர்வில் பணிநியமனம் வழங்கப்பட்ட பேரூராட்சி | தற்போது பணிபுரியும் பேரூராட்சி |
|---|---|---|---|
| 1. | திரு.கு.ராஜேந்திரன்<br>பதிவரை எழுத்தர்<br>மாமல்லபுரம் பேரூராட்சி | வரித்தண்டலர்<br>கலவை பேரூராட்சி<br>வேலூர் மாவட்டம் | இளநிலை உதவியாளர்<br>மாமல்லபுரம் பேரூராட்சி<br>(ஓய்வு நாள்.30.6.2022) |
| 2. | ஏ.ராஜேந்திரபாபு<br>அலுவலக உதவியாளர்<br>சிட்லபாக்கம் பேரூராட்சி<br>செங்கல்பட்டு மாவட்டம் | வரித்தண்டலர்<br>பள்ளிக்கொண்டா பேரூராட்சி<br>வேலூர் மாவட்டம் | வரித்தண்டலர்<br>மாமல்லபுரம் பேரூராட்சி<br>செங்கல்பட்டு மாவட்டம் |
| 3 | திரு.கா.ரவிச்சந்திரன்<br>மேல்நிலை தொட்டி காவலர்<br>குன்றத்தூர் பேரூராட்சி | வரித்தண்டலர்<br>பணப்பாக்கம் பேரூராட்சி<br>வேலூர் மாவட்டம் | இளநிலை உதவியாளர்<br>மாமல்லபுரம் பேரூராட்சி<br>செங்கல்பட்டு மாவட்டம் |
| 4 | திரு.துளசி<br>அலுவலக உதவியாளர்<br>பெருங்களத்தூர் பேரூராட்சி<br>செங்கல்பட்டு மாவட்டம் | வரித்தண்டலர்<br>பெருங்களத்தூர் பேரூராட்சி<br>செங்கல்பட்டு மாவட்டம் | வரித்தண்டலர்<br>அச்சரபாக்கம்<br>பேரூராட்சி<br>செங்கல்பட்டு மாவட்டம் |
| 5 | திரு.ஜே.வாசு<br>அலுவலக உதவியாளர்<br>திருப்பெரும்புதூர் பேரூராட்சி<br>காஞ்சிபுரம் மாவட்டம் | வரித்தண்டலர்<br>நந்திவரம் கூடுவாஞ்சேரி<br>பேரூராட்சி<br>செங்கல்பட்டு மாவட்டம் | வரித்தண்டலர்<br>கருங்குழி பேரூராட்சி<br>செங்கல்பட்டு மாவட்டம் |

அதனைத் தொடர்ந்து பேரூராட்சிகளில் பார்வை 2ல் காணும் அரசாணை (நிலை) 76, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.31.05.2019 ன்படி பணி நியமனம் செய்யப்பட்ட பணியாளர்களின் பணியினை 02.06.2001 ல் உரிய நியமன அலுவலரால் (Appointing Authority) வரன்முறைப்படுத்துவதுடன், அப்பதிவுகளை தனியரின் பணிப்பதிவேட்டில் மேற்கொள்ளவும், மேற்காணும் பணிவரன்முறையானது பேரூராட்சிகள் இயக்குநர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.984/2013 அ 3

//உண்மை நகல்//

நாள்.23.08.2021 க்கும், மற்றும் அரசாணைக்கு எதிராக தொடரப்பட்ட W.P.No.17989/2019, W.P.No.23426/2019, W.P.No.21574/2019 மற்றும் W.P.No.27597/ 2019 ஆகிய வழக்குகளில் வழங்கப்படும் தீர்ப்புகளுக்கு உட்பட்டது என்ற நிபந்தனையுடன் வரன்முறைபடுத்தப்பட வேண்டுமென பார்வை 5ல் காணும் அரசுக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் அவ்வினங்களில் விதித்தளர்வு தேவைப்படும் நபர்களுக்கு மட்டும் உரிய கருத்துருவினை அரசுக்கு அனுப்புமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி அரசு கடிதத்தில் தெரிவித்துள்ளதற்கிணங்க, இளநிலை உதவியாளர் / வரித்தண்டலர் ஆகியோர் நிலையில் பணிவரன்முறை செய்திட சம்மந்தப்பட்ட பணியாளரது பணிப்பதிவேட்டினை ஆய்வு செய்யப்பட்டதன் அடிப்படையில் சம்பளமில்லா விடுப்பு / தண்டனைக் காலம் ஏதுமில்லததால் தனியருக்கு கருத்தியலாக (Notionally) 02.06.2001 ம் தேதி முதல் பணிவரன்முறை செய்து ஆணையிடப்பட வேண்டி பார்வை 7, 8 மற்றும் 9 ல் காணும் பேரூராட்சி செயல் அலுவலர்களிடமிருந்து கருத்துரு வரப்பெற்றது.

| வ. எண் | பணியாளர் பெயர் பதவி மற்றும் பேரூராட்சி | கருத்தியலாக (Notionally) பணியில் ஈர்த்துக் கொள்ளப்பட்ட நாள் | பணிவரன்முறை செய்யும் பதவி / நாள். |
|---|---|---|---|
| 1 | 2 | 4 | 5 |
| 1 | திரு.கு.ராஜேந்திரன்<br>இளநிலை உதவியாளர்<br>மாமல்லபுரம் பேரூராட்சி<br>( ஓய்வு 30.6.2022) | 02.06.2001 | வரித்தண்டலர்<br>02.06.2001 |
| 2 | ஏ.ராஜேந்திரபாபு<br>வரித்தண்டலர்<br>மாமல்லபுரம் பேரூராட்சி | 02.06.2001 | வரித்தண்டலர்<br>02.06.2001 |
| 3 | திரு.கா.ரவிச்சந்திரன்<br>இளநிலை உதவியாளர்<br>மாமல்லபுரம் பேரூராட்சி | 02.06.2001 | வரித்தண்டலர்<br>02.06.2001 |
| 4 | திரு.து.துளசி<br>வரித்தண்டலர்<br>அச்சரபாக்கம் பேரூராட்சி | 02.06.2001 | வரித்தண்டலர்<br>02.06.2001 |
| 5 | திரு.ஜே.வாசு<br>வரித்தண்டலர்<br>கருங்குழி பேரூராட்சி | 02.06.2001 | வரித்தண்டலர்<br>02.06.2001 |

//உண்மை நகல்//

செயல் அலுவலர்

எனவே, மேற்காணும் இளநிலை உதவியாளர் / வரித்தண்டலர்களின் பணிப்பதிவேட்டினை ஆய்வு செய்யப்பட்டதன் அடிப்படையில் தனியருக்கு வரித்தண்டலர் பணியிடத்தில் கருத்தியலாக (Notionally) ஈர்த்துக் கொள்ளப்பட்ட 02.06.2001 ம் தேதி முதல், பேரூராட்சிகள் இயக்குநர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.984/2013 அ 3 நாள்.23.08.2021 க்கும், மற்றும் அரசாணைக்கு எதிராக தொடரப்பட்ட W.P.No.17989/ 2019, W.P.No.23426/2019, W.P.No.21574/2019 மற்றும் W.P.No.27597/ 2019 ஆகிய வழக்குகளில் வழங்கப்படும் தீர்ப்புகளுக்கு உட்பட்டது என்ற நிபந்தனையுடன் பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

மேற்குறிப்பிட்ட பணியாளரது பணியினை வரன்முறை செய்த விவரத்தினை பணிப்பதிவேட்டில் பதிவு செய்து அதன் விவரத்தினை இவ்வலுவலகத்திற்கு தெரிவிக்குமாறு சம்பந்தப்பட்ட பேரூராட்சி செயல் அலுவலருக்கு அறிவுறுத்தப்படுகிறது.

28.7.23

மாவட்ட ஆட்சியர்,
செங்கல்பட்டு

பெறுநர்

திரு.கு.ராஜேந்திரன் (ஓய்வு)
இளநிலை உதவியாளர், மாமல்லபுரம் பேரூராட்சி

திரு.ஏ.ராஜேந்திரபாபு
வரித்தண்டலர், மாமல்லபுரம் பேரூராட்சி

திரு.கா.ரவிச்சந்திரன்
இளநிலை உதவியாளர். மாமல்லபுரம் பேரூராட்சி

திரு.துளசி,
வரித்தண்டலர், அச்சரபாக்கம் பேரூராட்சி

திரு.ஜே.வாசு
வரித்தண்டலர், கருங்குழி பேரூராட்சி
( சம்பந்தப்பட்ட செயல் அலுவலர்கள் மூலமாக)

நகல் : பேரூராட்சிகள் இயக்குநர், சென்னை – 28 அவர்களின் தகவலுக்கு
நகல் : செயல் அலுவலர், மாமல்லபுரம், அச்சரபாக்கம் மற்றும் கருங்குழி பேரூராட்சி
நகல் : பேரூ 1 இருக்கை

//உண்மை நகல்//

செயல் அலுவலர்
மாமல்லபுரம் (சிறப்பு நிலை) பேரூராட்சி